**அக்கரைப்பற்று மாநகர சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i). | மீளாய்வாண்டிற்கான அறவிட வேண்டிய ரூபா 601,528 தொகையான வீதவரிகளும் வரிகளும் மற்றும் ரூபா 2,803,219 தொகையான வாடகைகளும் வருமான செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானங்கள் கணக்கில் காட்டப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii). | மீளாய்வாண்டில் பெறப்பட்ட முன்னைய ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 784,386 தொகையானது மீளாய்வாண்டிற்கான வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | குறித்த ஆண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் சரியான முறையில் கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii). | காணிகட்டிட மீதியானது வீதிகளின் கிரயம் ரூபா 310,828 உள்ளடக்கியிருப்பதுடன் கட்டிட திருத்தச்செலவு ரூபா 526,054 ஒரு மூலதனச் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | செலவினங்கள், அந்தந்த உரிய செலவின வகுப்புகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள காணி கட்டிட மீதியானது தவறுதலாக வீதிகளின் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனை திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். கட்டிட திருத்த செலவு தொடர்பில் திருத்தம் செய்வதற்கான நடலடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (iv). 18 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். | வாகனங்கள் யாவும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டிற்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்ட வரி மதிப்பீட்டு திணைக்களத்திடம் 2020.01.09 திகதி கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |
| (v). 2018 ஆம் ஆண்டில் சொத்துக்களின் இழிவுப் பொருள் விற்பனை ரூபா 80,650 ஆக காணப்பட்ட போதிலும், இச்சொத்துக்களின் கிரயப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களின் கிரயப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படல் வேண்டும். | இதனை திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 218 | நிருவாகம் தொடர்பாக அறிக்கை மீளாய்வாண்டிற்கு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிருவாகம் தொடர்பாக அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்வாக அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுகின்றது. |
| (ஆ) மோட்டார் வாகன போக்கு வரத்துச் சட்டத்தின் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். எனினும் சபையின் பராமரிப்பில் காணப்படுகின்ற 13 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வருமான உத்தரவுப் பத்திரம் எடுக்கப்பட வேண்டும். | தற்போது அவற்றினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| (i) நி.ஒ. 189 | 2014 ஆம் ஆண்டில் வாடகை தொடர்பில் பெறப்பட்ட ரூபா 45,255 பெறுமதியான காசோலையானது வங்கியால் | நிதிப்பிரமாண த்திற்கு அமைய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மறுக்கபட்டிருந்தும் மீயாய்வாண்டின் இறுதிவரை குறித்த நிதிப்பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | | |
| (ii) | நி.ஒ. 396 | ரூபா 47,403 பெறுமதியான ஆறு மாத காலத்திற்கு மேலாக மாற்றப்படாத 11 காசோலைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும். | உரியவர்களுக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டு அக்காசோலைகள் மாற்றப்படாத சந்தர்ப்பத்தில் அவற்றை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நி.ஒ. 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 105,000 கேள்வி வைப்புக்கள் கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த தொகையினை 02 வருடம் முடிவடைந்துள்ள நிலையில் அவற்றை வருமானத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (உ) | 1958 ஜூன் 01 ஆம் திகதிய 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச்சட்டத்தின் அத்தியாயம் 623, பிரிவு 3(1) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான ஊழியர் சேமலாப நிதியக் கூட்டுத் தொகையான ரூபா 144,117 வினை 2020 மே 15 ஆந் திகதி வரை நிதியத்திக்கு அனுப்பிவைக்கப்படாமல் பொது வைப்புக்கணக்கில் இடப்பட்டுள்ளது. | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகையினை உரிய காலத்தினுள் நிதியத்திக்கு அனுப்பிவைக்கப்ப டல் வேண்டும். | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான அங்கத்துவ இலக்கம் பெறப்படாமையால் அவை பொதுவைப்புக் கணக்கில் அங்கத்துவ இலக்கம் பெறப்படும் வரை வைக்கப்பட்டிருந்தது. இவற்றை மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஊ) | 1980 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச்சட்டத்தின் பகுதி II, பிரிவு 16(1) | 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியக் கூட்டுத் தொகையான ரூபா 26,928 நிதியத்திக்கு அனுப்பிவைக்கப்படாமல் பொது வைப்புக்கணக்கிலிடப் பட்டுள்ளது. | ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புத்தொகயினை உரிய காலத்தினுள் நிதியத்திக்கு அனுப்பிவைக்கப்ப டல் வேண்டும். | மேற்படி ஊழியர்களின் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான அங்கத்துவ இலக்கம் பெறப்படாமையால் அவை பொதுவைப்புக் கணக்கில் அங்கத்துவ இலக்கம் பெறப்படும் வரை வைக்கப்பட்டிருந்தது இவற்றை தொழில் திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 16,429,240 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 15,321,575 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 10,125,000 | 10,002,000 | 9,400,472 | 37,471,096 | 10,100,000 | 19,089,724 | 7,462,795 | 36,869,569 |
| வாடகைகள் | 22,181,224 | 22,596,023 | 19,790,804 | 21,443,890 | 16,557,920 | 15,785,506 | 2,407,855 | 18,638,671 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,125,000 | 3,456,380 | 3,456,380 | - | 2,650,000 | 2,265,010 | 2,265,010 | - |
| ஏனைய வருமானம் | 14,975,000 | 10,612,631 | 15,466,737 | 2,589,562 | 11,450,000 | 3,165,283 | 9,581,698 | 7,443,668 |
| | 50,406,224 | 46,667,034 | 48,114,393 | 61,504,548 | 40,757,920 | 40,305,523 | 21,717,358 | 62,951,908 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆதன வரி தொடர்பில் 12,873 குடியிருப்பாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டிய ரூபா 46,869,569 மொத்தமான ஆதன வரிகளில் 20 வீதமான ரூபா 9,398,472 தொகையான ஆதன வரிகளே அறவிடப்பட்டிருந்தது. | சோலைவரி அறிவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டு ஆதன வரி அறவீட்டு வீதத்தினை 85மூ மாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

#### 2.2.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையான காலத்திற்கான சந்தைக்குத்தகை ரூபா 19,105,939 தொகையில் 60 சதவீதமான ரூபா 11,508,809 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான குத்தகை வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1994 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையான காலத்திற்கான வாகனதரிப்பிட குத்தகை ரூபா 439,680 தொகையில் 20 சதவீதமான ரூபா 91,500 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக வாடகைத் தொகையினை உரிய காலத்தில் செலுத்தத் தவறியாதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அறவிடப்படவேண்டிய வியாபார நிலையங்களுக்கான வாடகை நிலுவை ரூபா 16,568,722 இல் 22 சதவீதமான ரூபா3,665,201 மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வாடகை வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அக்கரைப்பற்று மாநகர சபையில் கடமையாற்றி வந்த வருமான வரி உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்று சென்றுள்ளார்கள். அவ்விடத்திற்கு யாரும் நியமிக்கப்படவில்லை. இதன் காரணத்தினால் தங்களால் குறிப்பிடப்பட்ட காலத்தில் வாடகை அறவிடுவதில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. |
| (ஈ) | 167 பொதுச் சந்தைக் கடையறைகளின் வாடகை நிலுவை ரூபா 4,250,121 தொகைகள் அறவிடப்படாமல் காணப்படுகின்றது. | பொதுச் சந்தைக் கடையறைகள் நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வாடகை வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அக்கரைப்பற்று மாநகர சபை 2019.05.27 திகதி கடித்தின் மூலம் கடை உரிமையாளர்களுக்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் சிலர் நிலுவைத் தொகையினை செலுத்தாதுள்ளனர். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் சபை ஊழியர் மற்றும் ஒரு சனசமூக நிலையத்துக்கு வழங்கப்பட்ட ரூபா 106,003 தொகையான இரு முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணக்கொடுப்பன வுகளை தீர்பனவு செய்யப்பட/ கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பதவி வறிதாக்கப்பட்ட 05 அலுவலக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 155,851 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியினர் கடன் நிலுவைகளை அறவீடு செய்வதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | புதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து குறித்த கடன் நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. |
| (இ) | இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரு உறுப்பினரும் பிரதி முதல்வரும் எந்த அறிவிப்பும் இன்றி சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை, ஆனால் ரூபா.65,000 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்நடைமுறை பிழை எனின், அக்கொடுப்பனவுகளை மீள அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் 59 பதவி வெற்றிடங்கள் இருந்தன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆளணி நிரப்புதல் தொடர்பாக உள்;ராட்சி திணைக்களம், உள்;ராட்சி அமைச்சு என்பவற்றிற்கு அறிவுப்புச் செய்யப்பட்டள்ளன. |
| (ஆ) | சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் போன்றோர் நிரந்தரமாக நியமிக்கப்படடிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆளணி நிரப்புதல் தொடர்பாக உள்;ராட்சி திணைக்களம், உள்;ராட்சி அமைச்சு என்பவற்றிற்கு அறிவுப்புச் செய்யப்பட்டள்ளன. |
| (இ) | 2012 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்ற அத்துடன் 2007 ஆம் ஆண்டு காலஞ்சென்ற அலுவலக உத்தியோகத்தர் இருரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 118,997 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஓய்வு பெற்றுச் சென்ற அலுவலர் மற்றும் காலஞ்சென்ற அலுவலர் என்பவர்களிடம் இருந்து நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 அம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் வரை ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கியில் பொது நடைமுறை கணக்கில் 14.0 மில்லியன் முதல் 20.1 மில்லியன் வரை காசு மீதிகள் காணப்பட்டன. இதனை திறன்பட முதலீடு செய்ய தவறியதனால் கணிசமான வருமானத்தினை இழந்துள்ளது. | மேலதிக முதல் தொகையினை முறையாக அனுமானித்து வருமானம் உழைக்கும் குறுங்கால வைப்புகளில் இடுவதுனூடாக சபை வருமானத்கை அதிகரித்தல். | காசேட்டு மீதியானது சம்பள மீளளிப்பு, கேள்விவைப்பு என்பவற்றையும் உள்ளடக்கி இருப்பதனாலும், மேலும் சபையின் மீண்டுவரும் செலவினங்கள் தொடர்பாகவும் திரவத் தன்மையினை பேணவேண்டியுள்ளதனால் குறித்த தொகை பணம் காசுமீதியாக காணப்படுகிறது. |
| (ஆ) | 48 மீன் சந்தைக் கடையறைகள், 48 புதிய கட்டிடக் கடையறைகள், 01 பஸ்தரிப்பு நிலைய கடையறை மற்றும் 06 மாநகரப் பூங்கா கடையறைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | கடையறைகளை வாடகைக்கு விடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாநகர சபையானது கடையறை மூலமான வருமானத்தை தொடர்ச்சியாக பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இக்கடையறைகளை வாடகைக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு வருட இறுதியிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன எனினும் எவரும் கடையறையை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவில்லை. மேலும் சில கடையறைகள் குத்தகைக்கு வழங்க முடியாதுள்ளது. |
| (இ) | 47 கடைகளின் வாடகை ஒப்பந்தமானது 2018 ஆம் ஆண்டுடன் முடிவுற்ற போதிலும் அவற்றினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை 2020 மே 15 ஆந் திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை ஒப்பந்தமானது புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாநகர சபையானது கடையறை மூலமான வருமானத்தை தொடர்ச்சியாக பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அக்கரைப்பற்று மாநகர சபையால் வாடகைக்கு விடப்பட்ட 195 கடையறைகளில் 148 கடைக்காரர்கள் (இரண்டாம் திறந்தவர்கள்) ஒப்பந்தத்தை மீள புதுப்பித்துள்ளனர். 47 கடைக்காரர்கள் (இரண்டாம் திறந்தவர்கள்) மட்டுமே ஒப்பந்தத்தை மீள புதுப்பிக்காதுள்ளார்கள். |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் தீயணைப்பு பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கென ரூபா 19,882,270 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று நிர்மாண | நிர்மாண வேலைகள் நிறைவடை நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படல் | 2014ம் ஆண்டு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் தீயணைப்புப் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்ற நிலையில் 2015ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகள் நிறைவடையாத நிலையில் 06 ஆண்டுகளாக கைவிடப்பட்டு காணப்படுகின்றது. | வேண்டும். | முடிவடையாத நிலையில் காணப்படுகின்றது இதுவரை நிதி கிடைக்கப்பெறவில்லை. அமைச்சில் இருந்து நிதி கிடைக்கப்பெற்றதும் கட்டிடத்தை முடிவுறுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | திண்மக்கழிவுகளை சேதனைப்பசளைகளாக மாற்றுவதற்கென 2018 ஆம் ஆண்டு ரூபா 999,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ள இயந்திரம் 2020 மே 15 ஆந் திகதி வரை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் அச்செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பசளை அரிக்கும் இயந்திரத்தினையும் முற்றாக இயங்கச் சேகரிக்கப்பட்ட ஊழஅிழளவ குடைந களை அரிப்பதற்கும் பொதுமக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியமையினால் சேதனப்பசளை உற்பத்தியினை விரைவுபடுத்த முடியவில்லை.எனினும் எதிர்காலத்தில் இதனை இடம் பெயர்ப்பதற்கு அல்லது பொதுமக்களிடமும் உயர்மட்டத்தினரிடமும் சினேகபூர்வ பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவ்விடத்திலேயே சேதனப்பசளை உற்பத்தியினை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| (இ) | நெல்சிப் திட்டத்தில் உருவாக்கப்பட்ட சிறுவர் பூங்காவின் சிறுவர் மின்சார புகையிரதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து இயங்காமையினால் 2.3 மில்லியன் நிதி விளைவற்று காணப்பட்டிருந்தது. | சிறுவர் மின்சார புகையிரதம் வருமானம் ஈட்டுவதற்கு பயன்படுத்தல் வேண்டும். | குறித்த சிறுவர் பூங்காவிற்கான புகையிரதத்தை திருத்தம் செய்து தொடர்ந்து இயங்கவைக்கும் பொருட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப்பெற்றதும் கூடிய விரைவில் இயங்கவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.5 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரு நீர்த்தாங்கிகள் டிரயிலர்கள், ஒரு செயின் எக்ஸவேட்டர், 03 மோட்டார் சைக்கிள்கள், 04 உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு லொறி பழுதுபார்க்கப்படாமல் பாவணையற்று காணப்பட்டன. | திருத்தி பயன்படுத்து வதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விலை மதிப்பீடு செய்வதற்கு சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது இச் சபையின் அறிக்கை பெறப்பட்டதும் உடனடியாக திருத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

### 3.6. பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டிற்காக மீண்டுவரும் செலவினங்களான வழங்கல்களும் சாதனமும் மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 15.5 மில்லியனும் மூலதனச் செலவுகளாக ரூபா 21 மில்லியனும் பாதீடு செய்யப்பட்ட போதிலும், சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும். | 2019ம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டுக்கு அமைவாக பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. இது குறித்த தெளிவு எமது அலுவலர்களுக்கு இன்மையால் இத்திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட வில்லை ஆனால் எதிர் வரும் ஆண்டுக்கு முறையான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படும். |